தினமணி

Friday, April 20, 2012 9:21 AM IST

## ஆள் பற்றாக்குறை: வாழை விவசாயிகள் அவதி

First Published : 19 Apr 2012 03:28:59 PM IST

கரூர், ஏப். 18: கரூர் மாவட்டத்தில் வாழை வெட்டும் பணிக்கு போதிய ஆள்கள் கிடைக்காததால், விவசாயிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

கரூர் மாவட்டத்தில் மாயனூர், லாலாபேட்டை, சித்தலவாய், குளித்தலை மற்றும் இவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாய்க்கால் பாசனம் மூலமாக வாழை சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சைநாடன், நெய்ப்பூவன் போன்ற ரகங்கள் விளைவிக்கப்படுகின்றன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகள், கேரளம், கர்நாடக மாநிலங்களுக்கு இந்த வாழைகள் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

ஆள்கள் பற்றாக்குறையால் அவதி: சில ஆண்டுகளுக்கு முன்பு வாழைத் தாரை வெட்டி அனுப்பும் பணிக்கும், வாழைத் தோப்பில் சவுக்கு நடும் பணிக்கும் தினமும் ரூ. 50 வரை அளித்தோம். ஆனால், தற்போது தினமும் ரூ. 100 வரை கூலி வழங்கத் தயாராக இருந்தும் பணிக்கு ஆள்கள் வருவதில்லை என்கிறார் லாலாபேட்டையைச் சேர்ந்த வாழை விவசாயி ராம்.

மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிக்கு ஆள்கள் சென்றுவிடுவதால், வாழைத் தோட்டப் பணிகளுக்கு போதிய ஆள்கள் வருவதில்லை. இதனால், குறிப்பிட்ட நேரத்தில் வாழைத் தாரை வெட்டி அனுப்பமுடியாத நிலை உள்ளது என்றார் அவர்.

வாழைத் தார் விலை உயர்வு: கடந்த சில மாதங்களாகச் சரிந்து வந்த வாழைத் தாரின் விலை, தற்போது உயரத் தொடங்கியிருப்பது வாழை விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரூ. 60-க்கு விற்கப்பட்ட தார் ரஸ்தாளி, தற்போது ரூ. 130 வரையிலும், பூவன் ரூ. 50-லிருந்து ரூ. 90 ஆகவும், கற்பூரவள்ளி ரூ. 80-லிருந்து ரூ. 120 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. நெய்ப்பூவன் கிலோ ரூ. 21-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## உழவர் பெருவிழா

First Published : 19 Apr 2012 10:39:53 AM IST

திருக்கோவிலூர், ஏப். 18: திருக்கோவிலூர் அருகே சொரையப்பட்டு, கொழுந்திராம்பட்டு, கழுமரம் ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில், நடமாடும் வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மேலும் தோட்டக்கலை, பொறியியல், வணிகம் மற்றும் கால்நடைத்துறை சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டது.

இதில், வேளாண் உதவி இயக்குநர் கி.ராஜசேகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செந்தில்குமார், சிவக்குமார், வெங்கடகிருஷ்ணன், ஜெயராமன், துணை வேளாண்மை அலுவலர் புகழேந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செஞ்சியில்...

செஞ்சி, ஏப். 18: செஞ்சி அடுத்த மேல்மலையனூர் வட்டாரத்தில் உழவர் பெருவிழா செவ்வாய்கிழமை நடைபெற்றது.

அத்தியூர், வல்லம், மேல்மலையனூர் கிராமங்களில் நடைபெற்ற உழவர் பெருவிழா கூட்டங்களில் தோட்டக்கலை உதவி இயக்குநர்(பொ)க.சீனுவாசன் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். அத்தியூர், மேல்அருங்குணம், தச்சம்பட்டு கிராமங்களில் நடைபெற்ற விழாவுக்கு வேளாண்மை உதவி இயக்குநர்(பொ)ஜி.முருகன் தலைமை வகித்தார். செஞ்சி ஒன்றியக்குழு குழு தலைவர் இ.லட்சுமி சேகர் முன்னிலை வகித்தார். இதில் அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்கள் தத்தம் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். உதவி வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் 2-வது பசுமைப்புரட்சியை உருவாக்க அரசு நடவடிக்கை: வேளாண்மை இணை இயக்குநர்

First Published : 19 Apr 2012 11:49:06 AM IST

ராமநாதபுரம்,ஏப்.18: தமிழகத்தில் இரண்டாவது பசுமைப்புரட்சியை ஏற்படுத்தவும், உழவர்களின் வருமானத்தை உயர்த்தவும் தமிழக அரசு முடிவு செய்து ராமநாதபுரம் மாவட்டத்தில் 400 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா சிறப்பாக நடந்து வருவதாக வேளாண்மை இணை இயக்குநர் கா.சக்திமோகன் புதன்கிழமை கூறினார்.

ராமநாதபுரம் அருகே சாத்தான்குளம் கிராமத்தில் உழவர் பெருவிழாவை துவக்கி வைத்து அவர் மேலும் கூறியதாவது. உணவு உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்று நிலையான தன்மையை அடையவும், உழவர்களின் வருமானத்தை உயர்த்தவும், இரண்டாவது பசுமைப்புரட்சியை ஏற்படுத்திடவும் தமிழக அரசு பல்வேறு தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. இதற்காக ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 400 வருவாய் கிராமங்களை தேர்வு செய்து அங்கெல்லாம் உழவர் பெருவிழாக்களை சிறப்பாக நடத்தி வருகிறோம்.

ராமநாதபுரம் வட்டாரத்தில் மட்டும் ஆர்.எஸ்.மடை, அச்சடிப்பிரம்பு, சக்கரக்கோட்டை, கூரியூர், அச்சுந்தன்வயல், சூரன்கோட்டை, தொருவளூர் உள்ளிட்ட 25 கிராமங்களில் உழவர் பெருவிழா கொண்டாட தீர்மானிக்கப்பட்டு இம்மாதம் ஏப்ரல் 13-ம் தேதி தமிழ்ப்புத்தாண்டு தினத்திலிருந்து உழவர் பெருவிழாக்களை நடத்தி வருகிறோம். மண்மாதிரிகள் சேகரித்தல், மண் ஆய்வு செய்தல், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடுகள் வழங்குதல், விதை நேர்த்தி முறைகள், எலி ஒழிப்பு முறைகள், மானாவரி நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள், வேளாண் வணிக வாய்ப்புகள், கால்நடை பராமரிப்பு திட்டங்களான வெக்கைநோய், குடற்புழு நீக்கம் மற்றும் வேளாண்மையில் சிறு இயந்திரங்களின் பயன்பாடுகள் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டு வருகிறது.

கிராமிய பாடல்கள் மற்றும் கிராமிய நடனங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு வேளாண் தொழில் நுட்பங்களை விளக்கி வருகிறோம். மேலும் ஒலி,ஒளிக் காட்சிகள் மூலமாகவும் நவீன சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த வீடியோ காட்சிகளையும் காட்டி வருகிறோம் என்று கா.சக்திமோகன் கூறினார்.

உழவர் விழாவில் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் சமுத்திரபாண்டியன், பாலமுருகன், துணை வேளாண்மை அலுவலர் பி.காசிநாதன், மண்டபம் ஒன்றியத்தின்

தலைவர் முனியம்மாள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். ஆர்.எஸ்.மடை கிராமத்திலும் உழவர் பெருவிழா நடைபெற்றது. இந்த முகாமில் 300-க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

## நாளை விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

First Published : 19 Apr 2012 03:30:51 PM IST

அரியலூர், ஏப். 18: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அனு ஜார்ஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், வேளாண்மை தொடர்பான நீர்ப்பாசனம், பயிர் கடன், இடுபொருள்கள், இயந்திரங்கள், விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள் குறித்த முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, விவசாயம் சம்பந்தமான குறைகளைத் தெரிவிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

---

## சர்க்கரை ஆலை தொழிலாளர்கள் வாயிற்கூட்டம்

First Published : 19 Apr 2012 03:40:16 PM IST

தஞ்சாவூர், ஏப். 18: தஞ்சாவூர் அருகே குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் தொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தையொட்டி, ஆலை நிர்வாக அலுவலகம் முன் புதன்கிழமை வாயிற் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த தொ.மு.ச. செயலர் துரை. நாகராஜன் பேசியது:

தமிழ்நாட்டில் உள்ள 15 கூட்டுறவு, 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் 5,400 பேரும், தினக்கூலி தொழிலாளர்கள் 5,000 பேரும்

ஏப். 4-ம் தேதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். ஆலையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மாதந்தோறும் ரூ. 40,000 முதல் ரூ. 60,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஆலையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ. 10,000 முதல் ரூ. 13,000 வீதம் மட்டுமே வழங்கப்படுகிறது.

ஒரே ஆலையில் இரு விதமான ஊதியம் வழங்கப்படுவதைத் தவிர்த்து ஒரே விதமான ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி 15 நாள்களாக வேலைநிறுத்தப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியும், அரசின் கவனத்தை நேரடியாக ஈர்க்கவும் சென்னை கோட்டை முன் ஏப். 24-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்றார் நாகராஜன்.

இதில், சி.ஐ.டி.யு. செயலர் செல்வராஜ், தஞ்சாவூர் பணியாளர் சங்கப் பொறுப்பாளர் எஸ். ராஜு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

## லாபத்தை நோக்கி கூட்டுறவுத் தேயிலை ஆலைகள்!

First Published : 19 Apr 2012 01:27:25 PM IST

மஞ்சூர்,ஏப்.18: நீலகிரி மாவட்ட கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் லாப இலக்கை நோக்கிச் செல்வதால், சிறு, குறு தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் சிறு, குறு விவசாயிகள் 50 ஆயிரம் பேர் தேயிலை விவசாயம் செய்து வருகின்றனர். ஆரம்ப காலங்களில் கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் இல்லாத நிலையில், தனியார் ஆலைகளுக்கு பசுந்தேயிலையை விவசாயிகள் விநியோகம் செய்தனர். ஆனால், தனியார் ஆலை நிர்வாகங்கள் விவசாயிகளுக்கு உரிய விலை கொடுக்காமல் கொள்ளை லாபம் சம்பாதித்து வந்தன.

தனியார் ஆலைகளின் ஆதிக்கத்திலிருந்து தேயிலை விவசாயிகளை காப்பாற்ற கூட்டுறவுத் துறை மூலம் கடந்த 1962-ம் ஆண்டு எடக்காடு பகுதியில் முதல் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை தொடங்கப்பட்டது. விவசாயிகளின் பங்குத்தொகையின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு ஆலைகளுக்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்ததால், கூட்டுறவுத் தேயிலை ஆலைகளின் எண்ணிக்கையும் அதகரிக்கப்பட்டன.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர், எடக்காடு, பிக்கட்டி, கிண்ணக்கொரை, இத்தலார், மேற்குநாடு, கைகாட்டி, மகாலிங்கா, கரும்பாலம், கட்டபெட்டு, சாலீஸ்பரி உள்பட 15 கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் செயல்படுகின்றன. மேற்கண்ட ஆலைகளில் சுமார் 25 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர். அங்கத்தினர்களிடம் கொள்முதல் செய்யும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒருமுறை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

விவசாய அங்கத்தினர்கள் பெற்ற கடன்களை பல்வேறு காரணங்களால் திருப்பிச் செலுத்தாதது, உற்பத்தி செலவு அதிகரிப்பு, நிர்வாக சீர்கேடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பெரும்பாலான ஆலைகள் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை சந்தித்து, ஆலைகள் மூடும் நிலைக்கு தள்ளப்பட்டன.

இதனால் விவசாயிகள் விநியோகம் செய்த பசுந்தேயிலைக்கு உரிய விலை கொடுக்க முடியாத நிலையில், கூட்டுறவு ஆலைகளின் விலையைவிட கூடுதல் விலையை தனியார் ஆலைகள் கொடுத்ததால் பெரும்பாலான விவசாயிகள் தனியார் ஆலைகளுக்கு பசுந்தேயிலை விநியோகம் செய்ய ஆர்வம் காட்டினர்.

இதையடுத்து விழித்துக்கொண்ட இண்ட்கோசர்வ் நிர்வாகம் உற்பத்தி செலவுகளை குறைக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்தது. சுமார் ரூ.6 கோடி மதிப்பில் கூட்டுறவுத் தேயிலை ஆலைகளில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய டிரயர்கள், இயந்திரங்கள் நிறுவப்பட்டன.

இதனால் உற்பத்தி செலவுகள் குறையத் தொடங்கியதுடன், நிர்வாக செலவுகளும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதால், சில ஆண்டுகளாக கூட்டுறவுத்தேயிலை ஆலைகள் நஷ்டத்தைத் தவிர்த்து வருகின்றன. குறிப்பாக சாலீஸ்பரி, பிக்கட்டி, கைகாட்டி உள்ளிட்ட ஆலைகள் மாத பசுந்தேயிலை விலையுடன், ஆலையின் லாபத்தொகையும் அங்கத்தினர்களுக்கு கொடுத்து வந்த நிலையில், தற்போது மஞ்சூர், எடக்காடு, எரு மாடு உள்ளிட்ட ஆலைகளும் அங்கத்தினர்களுக்கு லாபத்தொகையை அளித்து வருகின்றன. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் அனைத்து கூட்டுறவு ஆலைகளும் லாபத்தில் செயல்படும் நிலை உருவாகும், என கூட்டுறவுத் துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

---

## உழவர் பெருவிழா: விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் அளிப்பு

First Published : 19 Apr 2012 03:47:42 PM IST

மன்னார்குடி, ஏப். 18: மன்னார்குடி வேளாண் கோட்டத்திற்கு உள்பட்ட மகாதேவபட்டணம், நெம்மேலி ஆகிய ஊராட்சிகளில் உழவர் பெருவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.
விழாவுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் த. நடேசன் தலைமை வகித்தார்.
ஊராட்சித் தலைவர்கள் வெங்கடேசன் (மகாதேவபட்டணம்), ஜெ.சங்கீதா (மூவாநல்லூர்), ஜயக்குமார் (நெம்மேலி) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
இதில் பங்கேற்ற வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலை, வேளாண்மை வணிகத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தமிழக அரசு சார்பில் விவசாயத்திற்கு அளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் பற்றி விளக்கினர்.
மேலும், விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான், உளுந்து விதை, களைகொல்லி, பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவற்றை மானியத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் த. நடேசன் வழங்கினார்.

---

## டிராக்டர்களை ஜப்தி செய்வதை நிறுத்தக் கோரிக்கை

First Published : 19 Apr 2012 03:51:06 PM IST

திருச்சி, ஏப். 18: விவசாயிகள் பெற்ற கடனுக்காக டிராக்டர் மற்றும் உழவுக் கருவிகளை ஜப்தி செய்வதை வங்கிகள் நிறுத்த வேண்டுமென காங்கிரஸ் விவசாயப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளது.
திருச்சிக்கு செவ்வாய்க்கிழமை வந்த மத்திய நிதித் துறை இணையமைச்சர் எஸ்.எஸ். பழநிமாணிக்கத்திடம் காங்கிரஸ் விவசாயப் பிரிவின் மாநில துணைத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன் அளித்த மனு விவரம்:

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் டிராக்டர் மற்றும் உழவுக் கருவிகளுக்கு வழங்கிய கடனை செலுத்தாத விவசாயிகளிடமிருந்து அவற்றை ஜப்தி செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நிலுவை கடனை செலுத்த விரும்பும் விவசாயிகளிடம் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றை தள்ளுபடி செய்து, அசல் தொகையை மட்டும் பெற்றுக் கொண்டு, விவசாயிகளைக் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் அந்த மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## ஏப். 25-ல் தோட்டக்கலை பயிர் சாகுபடி கருத்தரங்கம்

First Published : 19 Apr 2012 03:50:08 PM IST

திருச்சி, ஏப். 18 : திருச்சி மாவட்டம், சிறுகமணியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் தோட்டக்கலை பயிர் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள் குறித்த கருத்தரங்கம் நிலைய வளாகத்தில் ஏப். 25-ம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அ. சகுந்தலை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி முக்கியத்துவம் பெற்று வருகிறது. தற்போது மாறி வரும் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, திருச்சி மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் எடுப்பது மட்டுமல்லாது, அதிக வருமானம் மற்றும் லாபம் பெறுவதற்கேற்ற பயிர்களை தேர்வு செய்வது மிகவும் அவசியம். தோட்டக்கலைப் பயிர்களை பயிரிடுவதில் உயர் தொழில்நுட்பங்களை கையாளும் முறைகள் குறித்த ஒரு நாள் கருத்தரங்கு ஏப். 25-ம் தேதி சிறுகமணியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் குழித்தட்டு நடவு முறை, தரமான வாழைப்பழம் உற்பத்தி முறை, காய்கறிப் பயிர்களில் உரப் பாசனம், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் மதிப்புக் கூட்டிய பொருள்கள் தயாரித்தல் மற்றும் அறுவடைக்குப் பின் சார்ந்த சந்தைப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

இந்தப் பயிற்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், சிறுகமணி - 639115 என்ற முகவரிக்கு அஞ்சல்

மூலமாகவோ அல்லது 0431-2614417 என்ற தொலைபேசி மூலமாகவோ தகவல் தெரிவித்து விவரங்களை அறிந்து கொண்டு முன்பதிவு செய்து பயிற்சியில் பங்கேற்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்
நிறுவனர்: டி.வி. ராமசுப்பையர்

**மேலும் குறையும் வெங்காயம் விலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,23:42 IST

குறிச்சி : தாராபுரம் பகுதியிலிருந்து வரத்து அதிகரிப்பதால், சின்ன வெங்காயம் விலை மேலும் குறையும் வாய்ப்புள்ளது.

கடந்த சில வாரங்களாக, தக்காளியின் விலை அதிகரித்து காணப்பட்டது. தற்போது, மைசூரிலிருந்து தக்காளி வரத்து காணப்படுவதால், விலை சற்று குறைந்து, கிலோ 20 - 24 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அதுபோல, நாட்டுத்தக்காளி 16 - 22, வெண்டை 20 - 22, நாட்டு கத்தரி 25, ஹைபிரிட் கத்தரி 20, அவரை 28 - 30, புடலங்காய் 14 - 16, பீர்க்கங்காய் 16 - 20, ப.மிளகாய் (சம்பா) 16 - 20, ப.மிளகாய் 18 - 24, சி.வெங்காயம் 8 - 10, பெ.வெங்காயம் 8 - 11, முருங்கைக்காய் 10 - 14, கேரட் 20 - 28, பீட்ரூட் 16 - 20, முட்டைக்கோஸ் 22 - 26, புஷ் பீன்ஸ் 50 - 60, உருளைக்கிழங்கு 16 - 20, தேங்காய் 5 - 10, எலுமிச்சை 60 - 75, பூண்டு 25 - 35, இஞ்சி 18 - 24, சேனைக்கிழங்கு 14 - 16, சுரைக்காய் 10 - 12, அரசாணிக்காய் 6 - 8, பூசணிக்காய் 10 - 14 ரூபாய் ஆகிய விலைகளில் விற்கப்படுகின்றன.

""வரும் நாட்களில், தாராபுரம் பகுதியிலிருந்து சின்ன வெங்காயம் வரத்து அதிகரிக்கும் சூழல் உள்ளது; விலை மேலும் குறைய வாய்ப்புள்ளது. அதுபோல ஹைபிரிட் தக்காளியும். அதே நேரத்தில் எலுமிச்சை மற்றும் பீன்ஸ் விலை குறைய வாய்ப்பில்லை. தற்போது பெரும்பாலான காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது,'' என, சுந்தராபுரம் உழவர் சந்தை நிர்வாக அலுவலர் பார்த்திபன் கூறினார்.

---

**ரூ.1.61 கோடிக்கு கொப்பரை கொள்முதல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,00:18 IST

சுல்தான்பேட்டை : செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையத்தில், 35 நாளில் விவசாயிகளிடம் இருந்து ரூ.1.61 கோடிக்கு கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

செஞ்சேரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், ஒரு கிலோ கொப்பரை ரூ.51க்கு கொள்முதல் செய்யப்படுகிறது.செஞ்சேரி, செஞ்சேரிப்புத்தூர், ஓடக்கல்பாளையம், வதம்பச்சேரி, பச்சாபாளையம், வாரப்பட்டி, சுல்தான்பேட்டை, குமார பாளையம் உள்ளிட்ட பகுதி விவசாயிகளிடம் இருந்து, கடந்த 35 நாட்களில், 50 கிலோ எடை கொண்ட 6, 340 மூட்டை கொப்பரை ரூ.ஒரு கோடியே 61 லட்சத்து 67 ஆயிரத்துக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

---

**விருத்தாசலம் சந்தையில் குடிநீர், நிழல் இல்லாததால் மாடுகள் வரத்து குறைவு**

திவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,01:35 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் மாட்டுச் சந்தை யில் தேவையான அடிப்படை வசதி இல்லாததால் நாளுக்கு நாள் மாடுகளின் வரத்து குறையத் துவங்கியுள்ளது.

விருத்தாசலம் கண்டியாங்குப்பத்தில் வாரந்தோறும் வியாழக் கிழமைகளில் மாட்டுச் சந்தை நடந்து வருகிறது. இங்கு உளுந்தூர்பேட்டை, சின்னசேலம், தியாகதுருகம், நயினார்பாளையம், நெய்வேலி, திட்டக்குடி, மங்கலம்பேட்டை, விஜயமாநகரம் மற்றும் கேரள மாநிலத்திலிருந்தும் மாடுகள் விற்பனைக்கு வருகிறது.




சந்தைக்கு வரும் ஜோடி மாடுகளுக்கு 60 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. சந்தையிலிருந்து வியாபாரிகள் வாங்கி செல்லும் வளர்ப்பு மாடுகளுக்கு 160 ரூபாயும், இறைச்சி மாடுகளுக்கு 100 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. காலை 6 மணிக்கு துவங்கி மாலை 4 மணிக்குள் பெரும்பாலும் மாடு விற்பனை முடிந்து விடும்.

வியாபாரிகள், இடை தரகர்கள் உள் கமிஷன், வெளி கமிஷன் என இரு முறைகளில் மாடு விற்போரிடமும், வாங்குவோரிடமும் பணம் சம்பாதித்து விடுகின்றனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட வியா பாரிகள், இடைத்தரகர்கள் வந்து செல்வதால், அவர்களின் வசதிக்காக மினி குடிநீர் டேங்க் கட்டப்பட்டுள்ளது. பாதுகாப்பு இன்றி உள்ளதால் தண்ணீர் குடிக்க சிரமமடைய வேண்டியுள்ளது.

தண்ணீருக்கு தவிக்கும் மாடுகள்:

மாடுகளின் குடி தண்ணீர் வசதிக்காக கட்டப்பட்ட இரு சிமெண்ட் தொட்டிகளும் கட்டிய நாள் முதல் அதில் தண்ணீரின்றி காட்சிப் பொருளாகவே உள்ளது. இதனால் வாயில்லா ஜீவன்கள் வெயில் நேரத்தில் தண்ணீருக்கு தவிக்கின்றன.

சந்தைக்கு வரும் மாடுகளுக்கு அதிக கட்டணம் வசூலித்த போதும், வியாபாரிகள், மாடுகள் நிற்க தேவையான நிழல் வசதி இல்லை. திறந்த வெளியிலேயே காலை முதல் மாலை வரை கடுமையான வெயிலில் மாடுகள் கால்கடுக்க நிற்க வேண்டியுள்ளது. எனவே வாயில்லா ஜீவன்களின் நலன் கருதி நிழலுக்காக கொட்டகை அமைக்க வேண் டும். விருத்தாசலம் மாட்டுச் சந்தை மொத்தத்தில் அடிப்படை வசதி ஏதுமின்றி

உள்ளது.

இது குறித்து கோ.பூவனூர் மாடு வியாபாரி முருகேசன் கூறுகையில், ஆரம்பத்தில் மாட்டுச் சந்தை துவங்கியபோது 500 முதல் 600 மாடுகள் வரை விற்பனைக்கு வந்தன. தற்போது 100 முதல் 150 மாடுகளே விற்பனைக்கு வருகின்றன.

சந்Øதைக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை செய்து தந்தால் மாடுகளின் வரத்து அதிகரிக்கும். இல்லையெனில் மாடுகளின் வருகை குறைந்து விரைவில் மாட்டுச் சந்தைக்கு மூடப்படும் நிலை ஏற்படும் என்றார்.

---

**கரும்பு விலையை உயர்த்தக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,01:44 IST




விழுப்புரம் : தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் கரும்புக்கு விலை உயர்வு வழங்கக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.விழுப்புரம் கலெக்டர் அலுவலகம் முன் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு கரும்பு விவசாயிகள் சங்கத்தின் ராஜஸ்ரீ ஆலை சங்க செயலாளர் சிவராமன் வரவேற்றார். செங்கல்வராயன் ஆலை சங்க நிர்வாகி ஜெயராமன், ராஜஸ்ரீ ஆலை சங்கம் கதிர்வேல், குண்டுரெட்டியார் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன், விவசாயிகள் சங்க துணைத் தலைவர் சுப்பிரமணி, மாநிலக்குழு நிர்வாகி சீனுவாசன், ஜோதிராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி பேசினர்.
தமிழக அரசு அறிவித்தபடி கரும்பு டன்னிற்கு 3000 ரூபாய் வழங்க வேண்டும், தனியார் ஆலைகளிலும் கரும்பு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். கரும்பு, சர்க்கரை இரண்டையும் வெளிப்படையான வகையில் எடைபோட அனுமதிக்க வேண்டும். விவசாயிகளை பாதிக்கும் மின் வெட்டு பிரச்னைகளை தீர்க்க வேண்டுமென கோரிக்கைகளை வலியுறுத்தி கரும்புகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**எம்.எல்.ஏ., கைது:**
முண்டியம்பாக்கத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற எம்.எல்.ஏ., உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் முண்டியம்பாக்கத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலை முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. சங்க செயலாளர் புத்திரன் தலைமை தாங்கினார். போராட்டத்தை துவக்கி வைத்து ராமமூர்த்தி எம்.எல்.ஏ., சிறப்புரை நிகழ்த்தினார்.
மாநில செயலாளர்கள் மணி, கலியன், மாவட்ட செயலாளர் ராஜேந்திரன், வக்கீல் சங்கரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். தடையை மீறி ஆலைக்குள் எம். எல்.ஏ., ராமமூர்த்தி தலைமையில் நுழைய முயன்ற தொழிலாளர்களை டி.எஸ்.பி., சேகர், இன்ஸ்பெக்டர் குமார், சப்-இன்ஸ்பெக்டர் ராமையா மற்றும் போலீசார் கைது செய்தனர்.

---

## மானாவாரி நிலத்திலும் நல்ல மகசூலுக்கு வாய்ப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,01:31 IST

கோபிசெட்டிபாளையம்: மழையை மட்டுமே நம்பி சாகுபடி செய்யப்படும் மானாவாரி விவசாயத்தில், சில நவீன யுக்திகளை கையாண்டு, நல்ல மகசூல் எடுக்கலாம் என, வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.
கோபி வேளாண் உதவி இயக்குனர் பொறுப்பு ஆசைத்தம்பி கூறியதாவது:
தமிழகத்தில், 52 விழுக்காடு நிலம் மானாவாரியாக உள்ளது. மானாவாரியில் நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு, சோளம், கம்பு, ராகி, பருத்தி மற்றும் பயறு வகைகளான உளுந்து, துவரை, பாசிப்பயறு, தட்டை போன்றவை பெரும்பாலும் சாகுபடியாகிறது.

சிறு விவசாயிகளின் நிலங்கள் பெரும்பாலும் மானாவாரி சாகுபடியில் தான் உள்ளது. உரிய காலத்தில் மழை பெய்யாததாலும், தேவையான அளவு மழை கிடைக்காததாலும் மானாவாரி பயிர்களில் மகசூல் பெரிதும் பாதிப்படைகிறது. சில நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் நல்ல மகசூல் பெற முடியும்.

மானாவாரி நிலங்களில் சராசரி மழையளவு ஆண்டுக்கு, 600 மி.மீ., முதல், 800 மி.மீ., வரை உள்ளது. 35 முதல் 40 நாட்களில் மழை பெய்து முடிந்து விடுகிறது. சில ஆண்டுகளில் மழை பொய்த்து விடுகிறது. சில உழவியல் முறைகள் மூலம் பெய்யும் மழையை மண்ணில் தங்க வைத்து பயிருக்கு பயன்படுத்த இயலும்.
வயல் அமைந்துள்ள சரிவுக்கு குறுக்கே உழவு செய்வதால் மழை நீர் சால்களில் தேங்கி நின்று, மண்ணின் அடிப்பகுதிக்கு சென்றடையும். நிலப்பரப்பில் விழும் மழை நீர் வேகமாக வழிந்து விடாமல் நிதானமாக செல்வதால் மண்ணில் அதிக நீர் ஈர்க்கப்படும். மானாவாரி நிலங்களில் மண் ஈரத்தை சேமித்து வைக்க கோடை உழவு மிகவும் அவசியம். அறுவடைக்கு பின் சட்டிக்கலப்பையால் நிலத்தை ஆழமாக உழவேண்டும். நீர்ப்பிடிப்பு தன்மை அதிகமாகும். களை கட்டுப்படும். மண் அரிமானம் தடுக்கப்படும்.

மானாவாரி நிலங்களில் அங்கக உரங்களான தொழு உரம், கம்போஸ்ட் தென்னை நார்கழிவு உரம் ஊட்டமேற்றிய தொழு உரம் ஆகியவை இடுவதால் மண் ஈரம் காக்கப்பட்டு மண் வளம் மேம்படும். விதைகளை கடினப்படுத்துவதால், அவை வறட்சியை தாங்கி முளைத்து, நல்ல பயிர் எண்ணிக்கையை கொடுத்து, அதிக மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ விதைக்கு, 500 கிராம் சாம்பல், மூன்று சதம் கோந்து என்ற விகிதத்தில் கலந்து, ஐந்து மணி நேரம் நிழலில் காய வைத்து, விதைக்க வேண்டும். மழைக் காலத்தை சராசரியாக கருத்தில் கொண்டு, மழை பெய்வதற்கு இரண்டு வாரம் முன்பாகவே புழுதி விதைப்பு செய்ய வேண்டும். வழிமுறைகளை கடைபிடித்து மானாவாரியில் நல்ல மகசூல் பெற்று பயனடையலாம்.

---

**பட்டுப்புழு, மண்புழு வளர்ப்பு : 2 நாள் கருத்தரங்கம் நிறைவு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,01:58 IST

கரூர்: கரூர் அரசு கலை கல்லூரியில் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் மண்புழு வளர்ப்பு குறித்த அறிவியல் விழிப்புணர்வு இரண்டு நாள் கருத்தரங்கம் நேற்று நிறைவு பெற்றது.

கரூர் தாந்தோணிமலையில் அரசு கலைக் கல்லூரியில் விலங்கியல் துறை சார்பில், விவசாயிகள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், வேலையற்றோர், மாணவ, மாணவியருக்கான அறிவியல் விழிப்புணர்வு இரண்டு நாள் கருத்தரங்கம் நேற்று முன்தினம் துவங்கியது.

சென்னை தமிழக அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் மற்றும் டில்லி எ.சி.எஸ்.டி.சி., கருத்தரங்கு நடத்த நிதியுதவியின் கீழ் நடந்த முதல் நாள் கருத்தரங்கில், தாந்தோணி யூனியன் வேளாண் உதவி அலுவலர் சித்ரா, பேராசிரியர் ஞானசேகரன் ஆகியோர் பேசினர். நாமக்கல் அண்ணா அரசு கலைக் கல்லுரி பேராசிரியர் முனைவர் ராஜசேகரபாண்டியன் செய்முறை பயிற்சி அளித்தார்.

இன்று காலை 10 மணிக்கு நடந்த இரண்டாம் நாள் கருத்தரங்கில் திருச்சி மாவட்டம் நவலூர் விவசாயக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பயிர் பாதுகாப்புத் துறை தலைவர் முனைவர் கஜேந்திரன் பட்டுப்புழு வளர்ப்பு குறித்து விவசாயிகள் மற்றும் மாணவ, மாணவிகளுக்கு விளக்கம் அளித்தார்.

விலங்கியல் துறை பேராசிரியர் கார்த்திகேயன், பேராசிரியர் ரமேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

---

**வெளுத்த கண்மாயில் வெள்ளரி விவசாயம்: ராமநாதபுரத்தில் சாகுபடி அமோகம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,22:28 IST

ராமநாதபுரம் : வற்றிய சக்கரக்கோட்டை கண்மாயில், வெள்ளரி விவசாயம் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ராமநாதபுரம் சக்கரக்கோட்டை கண்மாய் 380 கன அடி கொள்ளளவு கொண்டது. பெரிய கண்மாயிலிருந்து வெளியேறும் உபரி நீர், இந்த கண்மாயில் தேங்குகிறது. இதன் மூலம் தெற்குதரவை, சக்கரகோட்டை, வன்னிக்குடி, ஆர்.எஸ்.மடை, பால்கரை, கண்ணணேந்தல், அச்சடிப்பரம்பு பகுதிகளில் விவசாயம் நடந்து வந்தது. பல பகுதிகள் பிளாட் ஆனதை தொடர்ந்து, தற்போது ஒரு சில பகுதிகளிலேயே விவசாயம் நடக்கிறது.

தற்போது தண்ணீர் வற்ற துவங்கியதை அடுத்து, கண்மாயில் பரந்து விரிந்துள்ள கரிசல் மண்ணில், அம்மன்கோயில், ஆர்.எஸ்.மடையை சேர்ந்தவர்கள் வெள்ளரி விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு விவசாயியும், ஒரு மாதத்தில் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை சம்பாதிப்பர். இந்த வெள்ளரி, வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்படுவதோடு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாவது, இதன் சுவைக்கு காரணம்.

---

ஒழுங்குமுறை கூடத்தில் விளைபொருட்கள் இருப்பு வைப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,23:57 IST

ஆனைமலை : -ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நெல், சோளம் உட்பட ஏழு ஆயிரத்து 680 மூட்டை விவசாய விளை பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

ஆழியார் அணையின் பழைய ஆயக்கட்டு மற்றும் புதிய ஆயக்கட்டு பாசனத்தில் ஆயிரத்து 200 ஹெக்டேர் பரப்பில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.

நெல் தவிர சோளம், மக்காச்சோளம், மஞ்சள், பாக்கு போன்றவைகளும், தென்னை அதிக அளவிலும் விவசாயம் செய்யப்படுகிறது. இதில் தென்னை ஆனைமலை வட்டாரத்தில் அதிக அளவில் உள்ளது. இந்த வட்டாரத்தில் விளையும் விவசாய விளை பொருட்களுக்கு போதிய விலை கிடைக்காதபோது ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இருப்பு வைக்கப்பட்டு போதிய விலை கிடைக்கும் போது விற்பனை செய்து விவசாயிகள் பயன் பெறுகின்றனர்.

ஆனைமலை சுற்றுப்பகுதியில் கடந்த மார்ச் மாத துவக்கத்திலிருந்து நெல் அறுவடை பணிகள் துவங்கப்பட்டு நடந்து வருகிறது. தற்போது அறுவடை செய்யப்படும் நெல்கள் அரசு நேரடி கொள்முதல் நிலையம் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. நெல்லிற்கு போதிய விலை கிடைக்காத விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இருப்பு வைத்தும் வருகின்றனர்.

தற்போது இங்கு ஐந்தாயிரத்து 576 மூட்டை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர மஞ்சள் 67 மூட்டையும், சோளம் 155 மூட்டையும், பாக்கு 604 மூட்டையும், மக்காச்சோளம் ஆயிரத்து 276 மூட்டையும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இந்த தகவலை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர்(பொறுப்பு) தமிழ்செல்வன் தெரிவித்தார்.

---

உழவர் பெருவிழாக்களில் பங்கேற்க விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,02:05 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாய பெருமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் உழவர் பெருவிழாக்களில் பங்கேற்று பயனடைய வேண்டும் என்று கலெக்டர் தரேஷ்அஹமது தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்ப்புத்தாண்டு கடந்த 13ம் தேதி முதல் ஒவ்வொரு

வட்டாரத்திலும் இரண்டு வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து மாலை 7.30 மணி வரை நடைபெற்று வருகிறது.
இந்த உழவர் பெருவிழா நிகழ்ச்சிகளில் வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, விதைச்சான்று அளிப்பு துறை, வேளாண் விற்பனை துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, பட்டுவளர்ச்சி துறை, ஆவின், கூட்டுறவு துறை, வேளாண் பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண் பல்கலை, வேளாண் அறிவியியல் நிலையம், தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலை, முன்னோடி வங்கி, நபார்டு மற்றும் நீர்வடிபகுதி மேம்பாட்டு முகமை போன்ற 18 துறையை சேர்ந்த அலுவலர்களை கொண்டு உழவர் பெருவிழா நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த உழவர் பெருவிழாக்களில் விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவதற்கும், உற்பத்தி திறனில் உள்ள இடைவெளியினை குறைப்பதற்கும் இரண்டாம் பசுமை புரட்சியினை நோக்கி செல்வதற்கான தொழில்நுட்ப செய்திகள் மற்றும் செயல் விளக்கங்கள் செய்து காண்பிப்பதுடன் தொழில்நுட்ப கருத்து பரிமாற்றம் நடந்து வருகிறது.
இந்த உழவர் பெருவிழாக்களில் கலந்து கொள்ளும் விவசாயிகளுக்கு மதியம் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

மாலையில் வீடியோ படக்காட்சி மூலம் தொழில்நுட்ப செய்திக்கான படங்கள் திரையிடுவதுடன் வேளாண் மற்றும் இதர துறை தொழில்நுட்ப செய்திகளை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வண்ணம் கலைநிகழ்ச்சி, நாடகம் மற்றும் தெருமுனை பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகிறது.
மாவட்டத்தில் நேற்று 19ம் தேதி பெரம்பலூர் யூனியனில் துறைமங்கலம், லாடபுரம், ஆலத்தூர் யூனியனில் புதுக்குறிச்சி, காரை, கொட்டரை, வேப்பூர் யூனியனில் அத்தியூர் , அகரம்சீகூர், வேப்பந்தட்டை யூனியனில் தழுதாழை, வெண்பாவூர் ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா நடந்தது.

இதேபோல், இன்று 20ம் தேதி பெரம்பலூர் யூனியனில் கல்பாடி, அம்மாபாளையம், ஆலத்தூர் வட்டாரத்தில் வரகுபாடி, ஆதனூர், வேப்பூர் யூனியனில் கிழுமத்தூர், வேப்பந்தட்டை யூனியனில் பெரியவடகரை, பாண்டகப்பாடி ஆகிய கிராமங்களிலும் உழவர் பெருவிழாக்கள் நடைபெற உள்ளன. இந்த உழவர் பெருவிழாக்களில் உழவர்

பெருமக்கள் கலந்து கொண்டு பயனடைய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,00:10 IST

கருத்தை பதிவு செய்ய

உடுமலை : உடுமலை அருகே தேவனூர்புதூரில், சிறு, குறு விவசாயிகள் மற்றும் வேலை உறுதியளிப்பு திட்ட தொழிலாளர்களுக்கு வங்கி கணக்கு துவங்க வங்கி நிர்வாகங்கள் அலைக்கழிப்பதை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட குழு உறுப்பினர் மாசாணி தலைமை வகித்தார். சம்பான் முன்னிலை வகித்தார்.

வேலை உறுதியளிப்பு திட்ட தொழிலாளர்களுக்கு வங்கி கணக்கு துவங்க காலதாமதம் செய்யக்கூடாது; கணக்கு துவங்க ஐநூறு ரூபாய் பணம்; பான்கார்டு உட்பட நிபந்தனைகளை விதிப்பதை தேவனூர்புதூரில் செயல்பட்டு வரும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கைவிட வேண்டும்.

அரசு உத்தரவு அடிப்படையில், ஜீரோ பேலன்ஸ் அடிப்படையில் வங்கி கணக்கு துவங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மதுசூதனன் உட்பட பலர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

---

**சாத்தையாறு அணையில் மீன் பண்ணை மூடல் : மீன் குஞ்சுகள் வளர்ப்பு நிறுத்தி வைப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,01:55 IST

பாலமேடு : சாத்தையாறு அணை வறண்டு வருவதால் மீன் பண்ணை மூடப்பட்டது. தண்ணீர் இல்லாததால் மீன் குஞ்சுகள் வளர்ப்பும் நிறுத்தப்பட்டது.

அணையின் கொள்ளளவு 29 அடி. நீர்ப்பிடிப்பு பகுதிகள் 450 எக்டேர்.

சிறுமலை, காட்டுநாயக்கன் ஓடை, மஞ்சமலை ஓடையில் இருந்து அணைக்கு நீர்வரத்து உள்ளது. அணை நீர் மூலம் எர்ரம்பட்டி, சின்னணம்பட்டி, கோவில்பட்டி, ஆதனூர் (கட்டிக்காரன் கண்மாய், குறவன்குளம்), கோணப்பட்டி உட்பட 11

கண்மாய்கள் பாசன வசதி பெறுகின்றன. பொதுப்பணித்துறை சார்பில் அணை பராமரிக்கப்படுகிறது.




மீன் குஞ்சு வளர்ப்பு: சாத்தையாறு அணையில் மீன் பண்ணை உள்ளது. கட்லா, கெண்டை, மிருகால், திலேபியா, ஜாதி மீன்களின் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன. ஆண்டு தோறும் ஐந்து லட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டு, வைகை அணை உட்பட பிற அணைகளுக்கு வழங்கப்பட்டது. நான்கு ஆண்டுகளாக அணையில் போதுமான தண்ணீர் இருந்ததால் அணையில் மீன்களும், மீன் பண்ணையில் மீன் குஞ்சுகளும் வளர்க்கப்பட்டன. கோடையை முன்னிட்டு அணை வறண்டு வருவதால் மீன்கள் மற்றும் குஞ்சுகள் வளர்ப்புக்கு தேவையான தண்ணீர் இல்லை. இதனால் மீன் பண்ணை தற்காலிகமாக மூடப்பட்டது.

மீன் விலை உயரும்: இனப்பெருக்கத்திற்காக கடலில் மீன் பிடிக்க அரசு தடை விதித்துள்ளது. கோடை காரணமாக அணைகள் வறண்டு வருவதால், மீன் வளர்ப்புக்கு வழியில்லை. தண்ணீர் உள்ள கண்மாய்களில் மட்டும் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. இந்தாண்டு மீன் உற்பத்திக்கு வழியில்லாததால் விலை உயரும்.
கடல் மீன்கள், அணை மீன்களுக்கு வழியில்லாததால் கண்மாய் மீன்களுக்கு மவுசு அதிகரிக்கும். மறுகால்களில் வலை விரித்து மீன்களை பிடிப்பதற்காக கண்மாய் தண்ணீரை சிலர் வெளியேற்றி வீணாக்குவதால், அடுத்தகட்ட மீன் வளர்ப்புக்கு

வழியில்லை. தண்ணீரை வீணடிப்போர் மீது பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

**உழவர் பெருவிழா ரத துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,22:47 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூரில் வேளாண்மை சார்பில் உழவர் பெருவிழா ரத துவக்க விழா நடந்தது. ஒன்றியக்குழு தலைவர் காளிமுத்து துவக்கி வைத்தார். உதவி இயக்குனர் முத்து முனியாண்டி முன்னிலை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் அய்யசாமி, வேளாண் பொறியியல் துறையை சேர்ந்த வைத்தியநாதன், பட்டு வளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர் செல்வராஜ், பால் வளத்துறை உதவி இயக்குனர் ரவி, கூட்டுறவு சார்பதிவாளர் ராஜேஸ்வர பாண்டியன், அ.தி.மு.க., ஒன்றிய இளைஞரணி செயலாளர் பொன்னுசாமி, மகளிரணி துணை செயலாளர் வள்ளி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

**விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,01:15 IST

அரூர்: அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை முன் பதிவு செய்யப்பட்ட கரும்பை அரவை செய்ய வலியுறுத்தி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாநில குழு உறுப்பினர் குமார் தலைமை வகித்தார். "ஒரு டன் கரும்புக்கு, 3,000 ரூபாய் வழங்கிட வேண்டும். கரும்பு வெட்டும் கூலியை ஆலை நிர்வாகம் ஏற்க வேண்டும். காய்ந்து போன கரும்புக்கு நஷ்ட ஈடு ஆலை நிர்வாகம் வழங்கிட வேண்டும். பதிவு செய்யப்பட்ட கரும்பு அரவை செய்ய வேண்டும்' உள்ளிட்ட கோரிக்கை வலியுறுத்தப்பட்டன.

பாப்பிரெட்டிப்பட்டி மார்க்சிஸ்ட் கட்சி வட்ட செயலாளர் சேகர், சிங்காரம், மாநில குழு உறுப்பினர் சின்னராசு, மாவட்ட துணை தலைவர் கோவிந்தன், சி.ஐ.டி.யூ., மாவட்ட துணை யெலாளர் நடராஜன், மனோகரன், சுந்தரமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

* கரும்பு வெட்டும் தொழிலாளர்கள் சங்கம் சார்பில், கூட்டுறவு சர்க்கரை ஆலை முன் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, தமிழ்நாடு கரும்பு வெட்டும் தொழிலாளர் சங்க மாநில குழு உறுப்பினர் கோவிந்தன் தலைமை வகித்தார். மாநில தலைவர் வெங்கடேசன்,

மாவட்ட அமைப்பு செயலாளர் முருகன், நாகராஜன், பெருமாள், கோவிந்தன் ஆகியோர் கோரிக்கை குறித்து பேசினர்.
"கரும்பு வெட்டும் தொழிலாளர்களுக்கு ஆலை நிர்வாகம் அடையாள அட்டை வழங்கிட வேண்டும். வெட்டு கூலியை ஆலை நிர்வாகம் வழங்கிட வேண்டும். தொழிலாளர்களுக்கு சீருடை, ஷூ, மழை கோட் இலவசமாக வழங்கிட வேண்டும்' உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

---

## இடுபொருள் விற்பனையில் முறைகேடு?

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,22:23 IST

தேனி : விவசாயத்துறையில் முறைகேடாக நடக்கும் இடுபொருள் விற்பனையை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விவசாயத்துறையில் விவசாயிகளுக்கு வழங்க உரங்கள், உயிர் உரங்கள் உட்பட ஏராளமான இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. இடுபொருட்களை தகுதியான விவசாயிகளுக்கு, கொடுத்தது போல் ஆவணங்களை தயாரித்து வெளிமார்க்கெட்டில் லாபத்திற்கு விற்கின்றனர். இதனால் தமிழக விவசாயிகளுக்கு அரசு வழங்கி வரும் மானியம், மற்ற மாநில விவசாயிகளுக்கும், வெளிமார்க்கெட் வியாபாரிகளுக்கும் சென்று சேர்கிறது. விவசாயத்துறையில் உள்ள குறைபாடுகளை களைந்து, அரசு வழங்கும் மானிய உதவிகள் முழுக்க தகுதியுள்ள விவசாயிகளுக்கு கிடைக்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

---

## வறண்டன கண்மாய் விவசாயம் பாதிப்பு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,22:22 IST

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றியத்தில் கண்மாய்கள் வறண்டு கிடப்பதால் விவசாய கிணறுகளில் நிலத்தடிநீர் மட்டம் குறைந்து வருகிறது.
கடமலை -மயிலை ஒன்றியத்தில் ங்குளம்,நரியூத்து, அம்மாகுளம், கோவில்பாறை,பஞ்சதாங்கி,கோவிலாங்குளம் போன்ற கண்மாய்கள் க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ளது.
இக்கண்மாய்களை தனி நபர் சிலர் ஆக்கிரத்துள்ளனர். மழைக்காலங்களில் தண்ணீரை தேக்கி வைக்க முடியவில்லை. தற்போது கண்மாய்கள் வறண்டு கிடக்கிறது. விவசாய கிணறுகளில் நீர் மட்டமும் குறைந்து வருகிறது. ஆக்கிரமிப்பினை அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**முருங்கை விலை இல்லை: விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,22:15 IST

ஆண்டிபட்டி : ஆண்டிபட்டி பகுதியில் முருங்கை சாகுபடியில் காய்ப்பு இருந்தும் விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் ஆண்டிபட்டி பகுதியில் திம்மரசநாயக்கனூர், டி.பொம்மிநாயக்கன்பட்டி, டி.சுப்புலாபுரம், சிலுக்குவார்பட்டி, ராஜகோபாலன்பட்டி, ஏத்தகோயில், சித்தையகவுண்டன்பட்டி, வருஷநாடு, கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை உட்பட பல கிராமங்களில் முருங்கை சாகுபடி உள்ளது.

இப்பகுதியில் உற்பத்தியாகும் முருங்கை தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

முதல் தர முருங்கைகள் வியாபாரிகள் மூலம் வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு முருங்கை மரங்களில் காய்ப்புகள் இல்லாததால் வியாபாரிகள் மத்தியில் அதிக கிராக்கி இருந்தது.

கிடைத்த சில கிலோ முருங்கை காய்களை காத்திருந்து வியாபாரிகள் அதிக விலை கொடுத்து வாங்கி சென்றனர். கிலோ நூறு ரூபாய் வரை விலை போன முருங்கை தற்போது 10 ரூபாய்க்கு கீழே குறைந்து வருகிறது.

தற்போது முருங்கை சீசன் துவங்கி இருப்பதால் தினமும் பல டன் முருங்கை காய்கள் அட்டைப்பெட்டிகளில் அடைக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகின்றன. விலை குறைந்ததால் எடுப்புக்கூலி, போக்குவரத்து செலவு போக குறைந்த அளவே லாபம் கிடைக்கிறது என்றும் முகூர்த்த சீசன் காலங்களில் தேவைகள் அதிகம் இருக்கும் என்பதால், இன்னும் சில வாரங்களில் விலை அதிகரிக்கும் என்றனர்.

**மீன்பிடி தடை எதிரொலி கேரள கடல் மீன் வருகை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 19,2012,22:13 IST

உத்தமபாளையம் : தமிழகத்தில் மீன்பிடி தடை காலம் அறிவிக்கப்பட்டுள்ளதால், தேனி மாவட்டத்தில் கேரள கடல் மீன்கள் விற்பனைக்கு வந்துள்ளன. தமிழக கடற்கரை பகுதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் விடப்படும் மீன்பிடி தடை காலம் கடந்த வாரம் முதல் அமலுக்கு வந்தது. இனி வரும் 45 நாட்களுக்கு கடல் மீன்கள் சப்ளை அறவே இருக்காது. இதையடுத்து குளிர்சாதன பெட்டிகளில் ஸ்டாக் வைக்கப்பட்ட மீன்கள் விற்பனைக்கு வந்தன. இவையும் தீர்ந்து விட்டது.

இதையடுத்து கொச்சின், திருவனந்தபுரம், ஆழப்புலா, எர்ணாகுளம் பகுதிகளில் மீன்களை வாங்கத் துவங்கியுள்ளனர். இதனால் தேனி மாவட்டத்தில் இவ்வகை மீன்கள் விற்பனைக்கு வந்துள்ளன. மீன்களின் விலையும் உயர்ந்துள்ளது.

---

**பயிர் காப்பீடு திட்டத்தில் பிரிமியம் செலுத்தியும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இன்னும் இன்சூரன்ஸ் வரவில்லை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 20,2012,02:24 IST

தூத்துக்குடி : பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பிரிமியம் கட்டிய விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இன்சூரன்ஸ் வழங்காததால் இனிமேல் ஒட்டு மொத்தமாக பிரிமியம் செலுத்தாத நிலை விவசாயிகள் மத்தியில் உருவாகும் என்று தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் ஆவேச புகார் தெரிவிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் ஆஷிஷ்குமார் தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் ரஞ்சித்சிங் தன்ராஜ், துணை இயக்குநர் குருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (பொ) மத்திய கூட்டுறவு பாங்க் தனி அதிகாரி பாண்டியன், பொதுப்பணித்துறை தாமிரபரணி வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் கெங்காதரன், உதவி பொறியார் ரகுநாதன், நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் ராஜேந்திரன், கண்காணிப்பாளர் ராமதாஸ், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பாலச்சந்திரன், வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குநர் முருகவேல், வேளாண்மை அலுவலர்கள் தாமஸ், ராஜா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நேற்றைய கூட்டத்தில் பிரதான பிரச்னையாக பயிர் காப்பீடு திட்டத்திற்கான பணம் கிடைக்கவில்லை என்று விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதற்கு இன்சூரன்ஸ் கம்பெனி சார்பில் அளிக்கப்பட்ட பதில் திருப்தி இல்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.
தூத்துக்குடி மாவட்டத்தில் நெல் உள்ளிட்ட பல்வேறு பயிர்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் விவசாயிகள் பிரிமியம் தொகை செலுத்தினர்.

பயிர்கள் கனமழையால் பாதிக்கப்பட்டு சேதமடைந்தால் அந்த பயிருக்கு இழப்பீடு தொகை இன்சூரன்ஸ் கம்பெனி வழங்க வேண்டும். இதற்கு தான் விவசாயிகள் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பிரிமிய பணமும் செலுத்தியுள்ளனர்.
2008-2009ம் ஆண்டில் இருந்து பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்துள்ள விவசாயிகளுக்கு பயிர்கள் சேதமான நிலையிலும் இழப்பீடு தொகை இன்சூரன்ஸ் திட்டம் மூலம் வழங்கவில்லை என்று விவசாயிகள் புகார் கூறினர்.

கடந்த ஆண்டில் தமிழக அரசு நிவாரண தொகை கூட பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு வழங்கப்பட்டது. இன்சூரன்ஸ் பணம் எதுவும் வழங்கவில்லை. இப்படியே போனால் இனிமேல் பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் சேரமாட்டார்கள். விவசாயிகளிடம் இருந்து பெற்ற பிரிமிய தொகையை திரும்ப கேட்கும் நிலை ஏற்படும் என்று பல விவசாயிகள் தெரிவித்தனர்.
இது சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் என்ன செய்ய வேண்டும் என்று விவசாயிகள் தெரிவித்தால் அதனை உயர் அதிகாரிகளிடம் தெரிவிக்க தயாராக இருப்பதாக கலெக்டர் கூறினார். இது சம்பந்தமாக இன்சூரன்ஸ் கம்பெனி அலுவலர் கூறுகையில், பிரிமியம் வசூல் தொகையை விட இழப்பீடு தொகை பத்து மடங்கிற்கு மேல் அதிகமாக கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. 2010-2011ம் ஆண்டிற்குரிய இழப்பீடு தொகை குறித்து தமிழக அரசு மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனை வழங்குவதற்கு அனுமதி வந்துவிட்டது. ஆனால் இன்னும் அதற்குரிய பணம் வரவில்லை. வந்தவுடன் கொடுக்கப்படும்.

அதற்கு முன்பு உள்ள இழப்பீடு தொகை வழங்கப்பட்டு விட்டன என்றார். இழப்பீடு தொகையை காலதாமதம் இல்லாமல் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்று கலெக்டர் உத்தரவிட்டார். இது போன்ற நிலை ஏற்பட்டால் ஒட்டு மொத்தமாக பயிர் காப்பீடு திட்டத்தை விவசாயிகள் புறக்கணிப்பர் என்று பல விவசாயிகள் தெரிவித்தனர்.விவசாயிகளிடம் இருந்து தனியார் அரிசி ஆலைகள் நெல் கொள்முதல் செய்யும் போது கட்டாயம் ஒரு குவிண்டாலுக்கு 1180 ரூபாய் வழங்க வேண்டும். இது சம்பந்தமாக ஆலை அதிபர்களையும், விவசாய சங்க பிரதிநிதிகளையும் அழைத்து கலெக்டர் பேச வேண்டும் என்று விவசாய சங்க நிவாகி தமிழ்மணி கூறினார். அரிசி ஆலை உரிமையாளர்கள் அடிமாட்டு விலைக்கு நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குகின்றனர். இதனை கலெக்டர் தடுக்க வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி ராஜேந்திரன் தெரிவித்தார்.

அறுவடைக்கு முன்பாக ஒரு மாதத்திற்கு முன்பாகவே நெல் கொள்முதல் நிலையம் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர். இது சம்பந்தமாக ஏற்பாடு செய்வதாகவும், ஆலை அதிபர்கள், விவசாய சங்க நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தை நடத்தவும் ஏற்பாடு செய்யப்படும் என்று கலெக்டர் கூறினார். ஏற்கனவே அறுவடைக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறையால் பெரும் பிரச்னை உள்ளது. இதனை பயன்படுத்தி கொண்டு அறுவடை இயந்திரம் ஒரு மணிக்கு 1800, 2000 ரூபாய் என்று நோக்கம் போல் பணம் வாங்குகின்றனர். இப்படியே போனால் விவசாயிகள் விவசாயத்தையே விட வேண்டிய நிலை வரும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பாலச்சந்திரன் கூறுகையில், தூத்துக்குடி மாவட்டத்திற்கு தற்போது ஒரு செயின் டைப் அறுவடை இயந்திரம் வந்துள்ளது. இன்னும் ஒரிரு நாட்களில் இவை வந்துவிடும். இதில் ஒரு மணி நேரத்திற்கு வாடகை ஆயிரத்து 170 ரூபாயாகும்.இந்த ஆண்டும் கூடுதலாக அறுவடை இயந்திரம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று கலெக்டர் தெரிவித்தார். ஏ.சி குடோன் வசதி இல்லாததால் மிளகு வத்தலை இருப்பில் வைக்க முடியவில்லை. கடந்த ஆண்டு பத்தாயிரம் ரூபாயிற்கு விற்ற வத்தல் தற்போது 4 ஆயிரம் ரூபாயிற்கு விற்கிறது. இப்படி என்றால் விவசாயிகள் என்ன செய்ய முடியும். கட்டப்படும் ஏ.சி குடோனை விரைவில் கட்ட வேண்டும் என்று விவசாய சங்க நிர்வாகி சித்தவன் தெரிவித்தார்.பாபநாசம் மற்றும் மணிமுத்தாறு அணையில் தூத்துக்குடி மாவட்டத்திற்குரிய உரிமை தொடர்ந்து பறிக்கப்படுகிறது. இதனால்

விவசாயம் பாதிக்கப்பட்டு வருவதாக விவசாய சங்க நிர்வாகி நயினார்குலசேகரன் தெரிவித்தார்.மாவட்டத்தில் பல்வேறு குளங்களை ஆழப்படுத்த வேண்டும். வடிகால் சீரமைக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

பொதுப்பணித்துறை எஸ்.டி.ஓ கெங்காதரன் கூறுகையில் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக பணிகள் செய்யப்படும் என்றார்.மின்சார பிரச்Ø ன சம்பந்தமாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். விவசாயத்திற்கு கூடுதல் மின்சாரம் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கலெக்டரிடம் வலியுறுத்தினர்.தாமிரபரணி நதியில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கு கீழ் மாவடிப்பண்ணை மங்களக்குறிச்சி பகுதியில் 667 கோடி ரூபாய் செலவில் புதிய அணை கட்டுவதற்கு திட்டமிட்டிருப்பதை வரவேற்கிறோம். பல்நோக்கு திட்டமாக இதனை செயல்படுத்த வேண்டும் என்று தென்கால் ஆத்தூரான் கால் நேரடி பாசன நீரினை பயன்படுத்துவோர் சங்கம் சார்பில் வலியுறுத்துகிறோம் என்று தலைவர் மதிவாணன் கூறினார்.விவசாய சங்க நிர்வாகிகள் கணபதிராமன், நிக்கோலஸ், நயினார்குலசேகரன் மற்றும் விவசாய சங்க நிர்வாகிகள், மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் திரளாக கூட்டத்தில் பங்கேற்றனர்.

---

தினத் தந்தி

***நானே ‘மெனு’ தயாரித்து கொடுத்துள்ளேன்***

***உழவர் பெருவிழாவிற்கு வரும் அனைத்து விவசாயிகளுக்கும் உணவு வழங்கப்படுகிறது***

***முதல்–அமைச்சர் ஜெயலலிதா பதில்***

*சென்னை, ஏப்.20–*
*உழவர் பெருவிழாவிற்கு வரும் அனைத்து விவசாயிகளுக்கும் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது. இதற்கான ‘மெனு’வை நானே தயாரித்து கொடுத்துள்ளேன் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறினார்.*
*சட்டசபையில் நேற்று வேளாண்மைத் துறை மானியக்கோரிக்கை மீது நடந்த இந்த விவாதம் வருமாறு:–*
*உரத்தட்டுப்பாடு இல்லை*
*வெங்கடேசன் (தே.மு.தி.க.):– உழவர் பெருவிழாவில் ஒரு வருவாய் கிராமத்திற்கு 150*

*விவசாயிகளுக்கு மட்டுமே உணவு வழங்கப்படுகிறது. வருகிற விவசாயிகள் அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்கள் உரிய காலத்தில் வழங்கப்படுவதில்லை. விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை.*

*அமைச்சர் தாமோதரன்:– உழவர் பெருவிழாவுக்கு வருகிற அனைவருக்கும் உணவு வழங்கப்படுகிறது. எந்த இடத்தில் உரம் உரிய நேரத்தில் தரவில்லை என்று குறிப்பிட்டு கூற வேண்டும். தமிழ்நாட்டில் போதுமான உரம் இருக்கிறது, உரத்தட்டுப்பாடு என்பதே இல்லை.*

*எந்திரமயமாக்க முடிவு*

*முதல்–அமைச்சர் ஜெயலலிதா:– தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை செயல்பாட்டில் குறை சொல்ல எதுவுமே இல்லை. மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன்னோடியாக தமிழ்நாடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் ஏதாவது குறை சொல்ல வேண்டுமே என்ற எண்ணத்தில் பேசுகிறார். பட்ஜெட்டிலேயே விவசாய தொழிலில் கூலி வேலை செய்ய ஆள் பற்றாக்குறை இருக்கிறது என்று கூறி அதனால் வேளாண்மையை எந்திரமயமாக்க வேண்டும் என்பதை ஒரு கொள்கையாகவே எடுத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். பலவித எந்திரங்களை வாங்கி, சிறு, குறு விவசாயிகள் அவற்றை வாங்க முடியாது என்பதால் அவர்கள் மலிவான வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறோம். அப்படி அவர்களுக்கு என்னென்ன எந்திரங்கள், எங்கே கிடைக்கும், எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லிக் கொடுக்கத்தான் இந்த உழவர் பெருவிழா நடத்தப்படுகிறது.*

*வடை–பாயாசத்துடன்*

*விஜயதரணி (காங்கிரஸ்):– எனது தொகுதியில் நடந்த உழவர் பெருவிழாவுக்கு நானும் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்த விவசாயிகள் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. அவர்களுடன் நானும் அமர்ந்து சாப்பிட்டேன்.*

*முதல்–அமைச்சர் ஜெயலலிதா:– ஏப்ரல் 13ந் தேதி உழவர் பெருவிழா நடத்தப்பட்டது. இதில் வருகிற விவசாயிகளுக்கு எந்தவிதமான உணவு வழங்க வேண்டும் என்பதற்கான 'மெனு'வை நான் தான் தயாரித்தேன். பலவித காய்கறி பதார்த்தங்கள், வடை, பாயாசத்துடன் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு அதன்படி தான் வழங்கப்பட்டு வருகிறது.*

*இவ்வாறு விவாதம் நடந்தது.*

---

## *நெல் கொள்முதல் விலை 16% உயர்த்தப்படலாம்*

## *கரீப் பருவ பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 30% வரை உயர வாய்ப்பு*

*ரிதுராஜ் திவாரி*

*புதுடெல்லி*

*எதிர்வரும் கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) பல்வேறு பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 30 சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நெல் கொள்முதல் விலை மட்டும் 16 சதவீதம் உயர வாய்ப்புள்ளது.*

*கரீப், ரபி பருவங்கள்*

*நம் நாட்டில் பிரதானமாக இரண்டு பருவங்களில் விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்கின்றனர். இந்தப் பருவங்கள் முறையே கரீஃப் மற்றும் ரபி என்று அழைக்கப்படுகின்றன. இந்தியாவின் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. ரபி பருவத்தின் பங்களிப்பு 15 சதவீத*

அளவிற்கே உள்ளது. ரபி பருவத்தில் நாடு முழுவதுமாக கோதுமை சாகுபடியே மும்முரமாக நடைபெறுகிறது.



கரீஃப் பருவம் ஜூன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் நிறைவடைகிறது. இப்பருவத்தில் விதைப்பு பணிகள் ஜூன் மாதத்தின் இடைப்பகுதியில் தொடங்கி ஜூலை மாதத்தின் இடைப்பகுதியில் நிறைவடையும். செப்டம்பர்– அக்டோபர் மாதங்களில், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அறுவடை பணிகள் மேற்கொள்ளப்படும். தென் மாநிலங்களில் ஆந்திராவும், தமிழ்நாடும் நெல் உற்பத்தியில் முன்னிலையில் உள்ளன. கரீஃப் பருவத்தில் பஞ்சாப், அரியானா மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது.

நெல், கோதுமை

நெல், கோதுமை உற்பத்தி மற்றும் கையிருப்பை அதிகரிப்பதில் மத்திய, மாநில அரசுகள் எப்போதுமே தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. உற்பத்தியை அதிகரிப்பதற்காக இவற்றுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையையும் மத்திய அரசு அதிகமான அளவில் நிர்ணயிக்கிறது. ஒரு குறிப்பிட்ட விளைபொருளுக்கு அதிக விலை கிடைக்கும் போதுதான் விவசாயிகள் அதனை சாகுபடி செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டுவர்.

வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையம், ஒவ்வொரு ஆண்டும் முக்கிய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த பரிந்துரைகளை மத்திய விவசாய அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கும். பொதுவாக ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் இந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கரீஃப் பருவம் தொடங்குவதற்கு முன்பாக குறைந்தபட்ச ஆதரவு விலை அறிவிக்கப்படுகிறது. இதனை கொள்முதல் விலை என்றும் கூறுவர். குறைந்தபட்ச ஆதரவு விலைகளை விதைப்பு பணிகள் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக அறிவிக்க வேண்டும் என்ற மரபு உள்ளது. அப்போதுதான் எந்த பயிர் அதிக லாபம் தரக் கூடியது என்பதை விவசாயிகள் முடிவு செய்து, அதன்படி ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் விதைப்பு பணிகளை மேற்கொள்ள இயலும். கரீஃப் பருவத்தில் பயிரிடப்படும் 14 வகையான பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை ஆணையம் பரிந்துரை செய்கிறது.

இந்த வகையில் எதிர்வரும் கரீஃப் பருவத்திற்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த பரிந்துரைகள் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையம் பல்வேறு விளைபொருள்களுக்கான கொள்முதல் விலையை 30 சதவீதம் வரை அதிகரிக்க பரிந்துரை செய்துள்ளதால், இனி வரும் மாதங்களில் அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய்க்காக நுகர்வோர் கூடுதலாக செலவிட வேண்டியிருக்கும். இதனால் உணவு பணவீக்கம் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

கொள்முதல் விலை

வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையம் நெல் கொள்முதல் விலையை 16 சதவீதம் அதிகரிக்க பரிந்துரை செய்துள்ளது. பருத்திக்கான விலையை 25 சதவீதமும், சோயாபீனுக்கான விலையை 30 சதவீதமும் உயர்த்த வேண்டும் என தெரிவித்துள்ளது. உளுந்து, பச்சைப்பயறுக்கு 25 சதவீதமும், கம்பு மற்றும் சோளத்திற்கு 40 சதவீதத்திற்கு மேல் கொள்முதல் விலையை உயர்த்தலாம் என

*கூறியுள்ளது. இந்த பரிந்துரைகள் அனைத்தும் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளன. ஆணையத்தின் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படுமானால் ஒரு குவிண்டால் உளுந்துக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.4,125–ஆக நிர்ணயிக்கப்படும். பச்சைப்பயறுக்கான விலை ரூ.4,375–ஆகவும், சோயாபீனுக்கான விலை ரூ.2,200–ஆகவும் நிர்ணயம் செய்யப்படும். சூரியகாந்தி விதை மற்றும் நெல்லுக்கான ஆதரவு விலை முறையே குவிண்டாலுக்கு ரூ.3,640 மற்றும் ரூ.1,250–ஆக உயரும். பருத்தி கொள்முதல் விலை ரூ.3,500–3,900 –ஆக உயர வாய்ப்புள்ளது. இதேபோன்று சோளம், மக்காச்சோளம் மற்றும் கம்பு ஆகிய பயிர்களுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.1,400–ஆக நிர்ணயிக்கப்படலாம்.*

*உணவு தானிய உற்பத்தி*

*வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையத்தின் பரிந்துரைகள் பொதுவாக பல்வேறு தரப்பினராலும் உன்னிப்பாக கவனிக்கப்படுகின்றன. ஏனென்றால் விளைபொருள்களுக்கான கொள்முதல் விலை உயர்த்தப்படும்போது அது பொருளாதாரத்தில் பல்வேறு விதங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது குறித்து கிரிசில் நிறுவனத்தின் இயக்குனர் சுனில் சின்ஹா கூறும்போது, “குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்படும்போது விளைபொருள் சந்தைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆதரவு விலை அதிகரிக்கப்படும்போது உணவுப் பொருள்கள் விலை உயர்ந்து பணவீக்கம் மேலும் உயரும். இதனால், உணவு தானியங்கள் உற்பத்தி அமோக வளர்ச்சி கண்டாலும் கூட பணவீக்கத்தை கட்டுப்படுத்துவது என்பது மிகவும் சவாலாகவே இருக்கும்” என்று தெரிவித்தார்.*

---

## குன்னூர் டீசர்வ் ஏலத்தில்

## தேயிலை தூள்களுக்கு ரூ.3 விலை உயர்வு

*குன்னூர், ஏப்.20–*

*குன்னூரில் நடைபெற்ற டீசர்வ் ஏலத்தில் 20 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. மேலும் அனைத்து ரக தேயிலை தூள்களும் ரூ.3 விலை உயர்வு ஏற்பட்டது.*

*கூட்டுறவு தொழிற்சாலைகள்*

*நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன. இந்த தொழிற்சாலைகளுக்கு உறுப்பினர்களாக உள்ள விவ சாயிகள் பச்சை தேயிலையை வழங்கி வருகிறார்கள். கூட்டுறவு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூள் குன்னூரில் உள்ள டீசர்வ் ஏல மையத்தில் வாரந்தோறும் புதன்கிழமை ஏலம் விடப்படு கிறது.*

*விற்பனை எண் 16–க்கான ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 3 லட்சத்து 8 ஆயிரத்து 666 கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 1 லட்சத்து 22 ஆயிரத்து 622 கிலோ தேயிலை தூள் இலைரகமாக வும், 1 லட்சத்து 86 ஆயிரத்து 44 கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*20 சதவீதம் தேக்கம்*

*ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண் டனர். இருப்பினும் 20 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. 80 சதவீத தேயிலை தூள் விற்பனை யானது. இதனால் அனைத்து ரக தேயிலை தூள்களுக்கும் ரூ.3 விலை உயர்வு ஏற்பட் டது.*

*சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.56–ல் இருந்து ரூ.60 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.75–ல் இருந்து ரூ.79 வரையிலும்*

ஏலம் சென்றது.
டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.62–ல் இருந்து ரூ.65 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.76–ல் இருந்து ரூ.78 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 17–க்கான ஏலம் வருகிற 26–ந் தேதி நடக்கிறது.

---

**புறவழிச்சாலை திட்டத்துக்கு நிலம் கையகப்படுத்தினால்**

**விவசாயிகளுக்கு மார்க்கெட் விலையில் இழப்பீடு வழங்க வேண்டும்**

**பா.ஜனதா கோரிக்கை**

கோவை,ஏப்.20–
கோவை புறவழிச்சாலை திட்டத்துக்கு நிலம் கையகப்படுத்தினால் விவசாயிகளுக்கு மார்க்கெட் விலையில் இழப்பீடு வழங்க வேண்டும் என்று பா.ஜனதா கட்சி சார்பில் கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.
பா.ஜனதா கட்சி மாநில செயலாளர் ஜி.கே.எஸ்.செல்வகுமார் கோவை மாவட்ட கலெக்டர் கருணாகரனுக்கு கோரிக்கை மனு அனுப்பி உள்ளார். அந்த மனுவில் கூறி இருப்பதாவது:–
கடும் போக்குவரத்து நெரிசல்
நாகை–கூடலூர்–மைசூர் தேசிய நெடுஞ்சாலை கோவையில் திருச்சி சாலை மற்றும் மேட்டுப்பாளையம் சாலை வழியாக நகரை கடந்து செல்கிறது. இந்த சாலையில் செல்லும் வாகனங்கள் அனைத்தும் நகருக்குள் வருவதால் நகரில் கடும் போக்குவரத்து நெரிசலும், உயிர் பலியும் அதிக அளவில் ஏற்படுகிறது.
சூலூர் காங்கயம் பாளையம் அருகில் தொடங்கும் இந்த உத்தேச புறவழிச்சாலை நீலாம்பூரில் என்.எச்.–47 சாலையை கடந்து சத்திய மங்கலம்–கோவை சாலையில் உள்ள கரட்டு மேடு என்.எச்.209–சாலையை யொட்டி, பல்வேறு கிராமங்கள் வழியாக நரசிம்ம நாயக்கன் பாளையம் அருகில் மீண்டும் என்.எச்.67 சாலையை கடந்து செல்கிறது.
விவசாயிகள் கடும் எதிர்ப்பு
நரசிம்மநாயக்கன் பாளையம், பெரியநாயக்கன்பாளையம், காரமடை ஆகிய 3 ஊர்களுக்கு அருகில் கிட்டதட்ட 6 கிலோ மீட்டர் தூரத்துக்கு தற்போதுள்ள மேட்டுப்பாளையம் ரோட்டிலே புறவழிச்சாலை உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இந்த புறவழிச் சாலை திட்டத்துக்கு ஆரம்பத்தில் இருந்தே விவசாயிகள், பொதுமக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.
விளை நிலங்கள் பாதிக்க கூடிய நிலையில் உள்ளதால் மாற்றுப்பாதையில் சாலை அமைக்க திட்டம் அமைத்து தமிழக அரசிடம் விவசாய அமைப்புகள் வழங்கி உள்ளனர். ஆனால் தமிழக அரசோ, நெடுஞ்சாலைத்துறையோ இது பற்றி கண்டு கொள்ள வில்லை. மாறாக இந்த திட்டத்தில் உறுதியாக இருந்து டெண்டர் விடும் பணியை தொடங்கி உள்ளனர்.
நல்ல முடிவு தேவை
ஆகவே இந்த திட்டத்துக்கு நிலம் கையகப்படுத்தும் பட்சத்தில் இன்றைய மார்க்கெட் விலையில் தகுந்த இழப்பீடு வழங்கி அத்துடன் அவரது குடும்பத்தாருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். மேலும் மேட்டுப்பாளையம் ரோட்டில் சுங்க வரி வசூல் மையம் அமைப்பதை அடியோடு ரத்து செய்ய வேண்டும். தேவைப்பட்டால் புதிய புறவழிச் சாலையில் சுங்கவரி மையத்தை மாற்றிக்கொள்ளலாம். ஆகவே நெடுஞ்சாலைத்துறை ஆணையமும், தமிழக அரசும், இந்த விஷயத்தில் பிடிவாதம் காட்டாமல் மக்கள் கருத்தையும், விவசாயிகள் கருத்தையும் கேட்டு நல்ல முடிவு

*எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மக்களை திரட்டி அறப்போராட்டங்களை நடத்துவோம்.*
*இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.*

---

### கோவை மாவட்டத்தில்

### *300 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயம்*

### *பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் வைத்தியநாதன் தகவல்*

*கோவை,ஏப்.20–*
*கோவை மாவட்டத்தில் 300 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர் வைத்திய நாதன் கூறினார்.*
*கோவை பட்டுவளர்ச்சித்துறை உதவி இயக்குனர் வைத்திய நாதன் கூறியதாவது:–*
*மல்பரி சாகுபடி*
*மல்பரி செடி சாகுபடி செய்து அதன் மூலம் பட்டக்கூடுகளை உற்பத்தி செய்து நல்ல லாபம் சம்பாதிக்க முடியும். இதற்காக தோட்டத்தின் வரப்பு, வாய்க்கால் வேலி ஓரங்களிலும், குடியிருப்பு மனைகளை சுற்றிலும், வீட்டின் பின்புறத்திலும் 8–10 அடி இடை வெளி விட்டு மல்பரி செடிகளை நடவு செய்து பலன் அடையலாம். மல்பரி நாற்று உற்பத்தி செய்வதற்கு 6.5 முதல் 7.0 வரை கார, அமிலத்தன்மை கொண்ட வண்டல் கலந்த செம்மண் நிலம் சாலச்சிறந்தது. 3 முதல் 4 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்யக்கூடிய அளவு தண்ணீர் வசதி இருக்க வேண்டும். மல்பரி நடவு செய்வதற்கு முன்பு அடியுரமாக ஏக்கருக்கு 8 முதல் 10 டன் தொழு உரம் இட வேண்டும். வளர்ந்த மல்பரி மரங்களில் இருந்து ஆண்டுக்கு 3–4 முறை புழு வளர்ப்பு மேற்கொள்ளலாம். ஒரு மரத்துக்கு ஒரு பட்டு முட்டை தொகுதி வளர்த்து ½ கிலோ பட்டுக்கூடு உற்பத்தி செய்யலாம். ஒரு ஏக்கர் தோட்டத்தை சுற்றிலும் 100 முதல் 125 மரங்கள் வரை வளர்த்து 50 முதல் 60 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்து அறுவடை ஒன்றுக்கு ரூ.10 ஆயிரத்துக்கு மேல் வருமானம் ஈட்ட முடியும்.*
*கோடை கால நோய்*
*இந்த நிலையில் தற்போது கோடை கால வெயில் கொளுத்துவதால் கடந்த 3 மாதங்களாக பட்டு வளர்ப்புக்கு சாதகமான வெப்ப நிலை இல்லாமல் உள்ளது. அதிக வெப்ப நிலை புழு வளர்ப்பு மனைகளில் நிலவும் போது பால் புழுக்களை எளிதில் நோய் கிருமிகள் தாக்கி விடும். ஒருமுறை பால் புழுக்களுக்கு நோய் தாக்குதல் ஏற்பட்டால் தொடர்ந்து 3 புழு வளர்ப்புகள் பாதிக்கப்படும். அந்த நோய் கிருமிகள் தொடர்ந்து அழியாமல் இருக்கும். இந்த பால் புழு நோய் வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. இந்த கிருமிகளை அழிக்க மற்ற மருந்துகளை விட சுண்ணாம்பு நீர் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். ஆகவே ஒவ்வொரு புழு வளர்ப்பு முடிந்ததும் புழு வளர்ப்பு மனையை சுண்ணாம்பை கொண்டு வெள்ளைஅடிக்க வேண்டும் மேலும் மனைகளில் உள்ள முதிர் புழுக்களுக்கு குறைந்த வெப்பநிலை ஏற்பட வழிவகை செய்ய வேண்டும். ஆகவே சீரான பட்டு புழு வளர்ப்புக்கு பருவத்துக்கு ஏற்ப தேவையான ஈரப்பதம் சீராக பராமரிக்கப்பட வேண்டும்.*
*400 ஏக்கரில் பயிரிட திட்டம்*
*மேலும் கோவை மாவட்டத்தை பொறுத்தவரை பட்டுவளர்ச்சித்துறை இயக்குர் பிரபாகரன் உத்தரவின் பேரில் கடந்த ஆண்டில் மட்டும் 230 ஏக்கர் நிலபரப்பில் மல்பரி சாகுபடி செய்யப்பட்டது. இதில் விவசாயிகளுக்கு நடவு மானியமாக ரூ.12*

லட்சத்து 500–ம், புழு வளர்ப்பு மனை மானியமாக ரூ.10 லட்சம், சொட்டு நீர் பாசன மானியமாக ரூ.11 லட்சம் உள்பட மொத்தம் 24 லட்சத்து 87 ஆயிரம் வழங்கப்பட்டு உள்ளது. அடுத்த ஆண்டில் 300 ஏக்கர் நில பரப்பில் மல்பரி சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளோம்.
புது வாழ்வு திட்டத்தின் கீழ் தற்போது தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் சாடிவயல்பதி, சீங்கபதி மலைக்கிராமங்களில் பட்டு வளர்ச்சி சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, பட்டுப்புழு வளர்ப்புக்கு தேவையான மல்பரி செடி நடவு சுமார் 35 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு, புழு வளர்ப்பு மனைகள் அமைக்கப்பட்டு உள்ளன.
இவ்வாறு அவர் கூறினார்.

கருமத்தம்பட்டி, ஏப்.20–
மின் கட்டண உயர்வை ரத்து செய்யக்கோரி கோவை,திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் சோமனூரில் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.
உண்ணாவிரத போராட்டம்
கோவை–திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தினர் சார்பில் தற்போது விசைத்தறி தொழிலுக்கு உயர்த்தப்பட்ட மின் கட்டண உயர்வை முழுமையாக ரத்து செய்யக்கோரி மின் வாரியத்துக்கும், தமிழக முதல்–அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு செல்லும் வகையில் சோமனூர் பவர்ஹவுஸ் கார்னர் முன்பு ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.
போராட்டத்துக்கு கோவை–திருப்பூர் மாவட்ட கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் சங்க தலைவர் சி.பழனிச்சாமி தலைமை தாங்கினார். செயலாளர் குமாரசாமி, பொருளாளர் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
கூட்டத்தில் சோமனூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளைச் சேர்ந்த விசைத்தறி உரிமையாளர்கள், சங்க நிர்வாகிகள், விசைத்தறி தொழில் சார்ந்தோர் உள்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.
முன்னாள் எம்.எல்.ஏ.
இந்த உண்ணாவிரத போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, தி.மு.க. சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ.வும், சூலூர் பேரூராட்சி தலைவருமான எஸ்.எஸ்.பொன்முடி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சூலூர் ஒன்றிய செயலாளர் மவுனசாமி, ம.தி.மு.க. மாநில பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே.தங்கவேல், கண்ணம்பாளையம் பேரூராட்சி தலைவர் தளபதி முருகேஷ், கொ.மு.க. மாநில தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி, வடக்கு மாவட்ட செயலாளர் மாணிக்கராஜ் ஆகியோர் விசைத்தறி உரிமையாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள். மேலும் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து விசைத்தறி தொழிலையும், தொழில் சார்ந்தவர்களையும் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.
போராட்டம் குறித்து சங்க தலைவர், செயலாளர் ஆகியோர் கூறியதாவது:–
ரத்து செய்ய வேண்டும்
விசைத்தறி தொழிலுக்கு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மற்ற துறைகளை காட்டிலும், ஒன்றுக்கு மூன்று மடங்காக 110 சதவீதம் மின் கட்டணத்தை உயர்த்தி அறிவித்துள்ளது. இந்த கட்டணத்தை கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களால் எந்த வகையிலும் செலுத்த இயலாது. பழைய ஸ்லாப் முறையை அமல்படுத்தி மின்கட்டண உயர்வை ரத்து செய்ய அமைச்சர்கள், மற்றும் மின்சார ஒழுங்கு முறை ஆணையம், மின்வாரிய அதிகாரிகள் அனைவரிடமும் விசைத்தறி உரிமையாளர்கள் சார்பில் கோரிக்கை வைத்தோம். ஆனால் இது வரை எந்த பயனும் இல்லை.
ஆகையால் விசைத்தறியாளர்களின் கஷ்ட நஷ்டங்களை விளக்கியும் அபரிதமாக உயர்த்திய மின்கட்டணத்தை முழுமையாக நீக்க வலியுறுத்தியும் தமிழக முதல்–அமைச்சரின் கவனத்திற்கு இந்த பிரச்சினையை கொண்டு செல்லும் வகையில்

இந்த அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெறுகிறது. விசைத்தறி தொழிலை காக்கும் வகையில் அரசும், முதல்–அமைச்சரும், மின்சாரத்துறையினரும் இந்த பிரச்சினைக்கு உரிய தீர்வை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.
இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

---

கொலக்கம்பை பகுதிகளில் தொடரும் வெயில்:

# பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் பணியில் விவசாயிகள் தீவிரம்

கொலக்கம்பை, ஏப்.20-

கொலக்கம்பை பகுதியில் தற்போது நிலவி வரும் வெயில் காரணமாக விவசாயிகள் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

**விவசாய நிலங்கள்**

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக சமவெளி பகுதிகளுக்கு ஈடாக பகல் நேரங்களில் கடுமையாக வெயிலும், இரவு நேரங்களில் லேசான குளிரும் நிலவி வருகிறது. இந்த கடுமையான வெயிலினால் வனப்பகுதிகள், விவசாய நிலங்கள் வறண்டு காணப்படுவதுடன் நீர் நிலைகளிலும் தண்ணீர் இன்றி காணப்படுகின்றன.

கோடை காலம் தொடங்கிய சில நாட்களிலேயே இந்த ஆண்டு கடுமையான வெயில் அடித்து வருவதால் விவசாயிகளும், பொது மக்களும் பல்வேறு அவதிக்குள்ளாகி வருகின்றனர். கடந்த 2 நாட்களுக்கு முன்பு சில சமயம் மழை பெய்தாலும், இந்த மழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் மீண்டும் வெயில் அடிக்கிறது.

**பீன்ஸ்**

இந்த வெயில் காரணமாக கொலக்கம்பை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள காய்கறி பயிர்கள் வெயிலுக்கு தாக்குபிடிக்க முடியாமால் வாடி வருகின்றது. இதன் காரணமாக விவசாயிகள் பயிர்களை காப்பாற்ற நீரோடைகளில் வரும் குறைந்த அளவு தண்ணீரை தேக்கி வைத்து மோட்டார் மூலம் விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

தற்போது அறுவடைக்கு தயாராக உள்ள பீன்ஸ் செடிகளும் போதிய மழை இல்லாததால் வறண்டு காணப்படுவதுடன் செடிகள் வாடி வருகின்றன. மேலும் இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் மழை வேண்டி சிறப்பு பூஜைகளும் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

**தேயிலை**

இந்த பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களும் தற்போது மழை இல்லாமல் வறண்டு உள்ளதால் நீரோடையை ஒட்டியுள்ள பகுதிகளில் விவசாயிகள் 'ஸ்பிரிங்லர்' மூலம் தேயிலை தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர்.

செங்குத்தான பகுதிகளில் உள்ள தேயிலை தோட்டங்களில்போதியநீர்பாய்ச்சமுடிவதில்லை. மேலும் வறட்சியின் காரணமாக சிவப்பு நிற சிலந்தி பூச்சி தாக்குதல் ஏற்பட்டு மகசூலும் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே இதனை நம்பியுள்ள விவசாயிகள் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகின்றனர். தொடர்ந்துமழை பெய்யுமா? என்றுஎதிர்பார்த்து உள்ளனர்.



கொலக்கம்பை பகுதியில் நிலவும் கடும் வெயில் காரணமாக விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் விவசாயியை படத்தில் காணலாம்.

---